Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# The Virtues of Devotional Women

**Dr. K. Nagendran,** Assistant Professor, Department of Tamil, Sri S. Ramasamy Naidu Memorial College, Sattur, Virudhunagar District. Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-2865-7832
DOI: 10.5281/zenodo.14744906

## Abstract

*During the Bhakti movement, the Nayanmars and the Azhwars sang devotional songs. It was started by Saiva great devotees like Karaikal Ammaiyar and Thirumoolar. According to historians, it dates back to the 5th century BC. Of the sixty-three Nayanmars in the Shiva temples, it is remarkable that sixty-two Nayanmars are standing while Karaikal Ammaiyar is only in a seated position. At a time when male dominance was on the rise, the Karaikal Ammaiyar lived at its best and attained Mukthi. The purpose of this study is to demonstrate Karaikal Ammaiyar's devotion. Women are equal to men in terms of intelligence, speaking ability, culture, living conditions, etc., without any inferiority. Literature from the beginning to the present day has shown that they are worthy of respect and belonging to everyone. In such a sequence, the devotional excellence of one of the female devotees, named Punitavathiyar alias Karaikal Ammaiyar, who is mentioned in the Thiruthondar Puranam has been decided to be examined. The life of Karaikal Ammaiyar is a wonderful life of sacrifice on devotion. She did something that no one dared to do. She renounced her youth and took the form of an apparition. On seeing her devotion, She was also called "Ammaiye" by the Almighty Lord Shiva. She is the first lady to sing Andhathiyam and Padigam in the Tamil language.*

**Keywords:** Mother, Punithavathiyar, Union, Queen of all Women, Apparition

## References

[1] Gomati Suriyamurthy . *India Illakkiya Sirpikal Karaikkal Ammaiyar*. Sahitya Akademi, Ayntham Pathippu. 2020.
[2] Sirpi Balasubramaniam. *Thirukkural.* Tamarai Publications (P) Lit, Chennai-600050
[3] Manikanar, A. Pulavar. *Panniru Thirumuraikal Mulamum Thelivuraiyum* (Munram Thokuthi) Varthamanan Pathippagam, 1998.
[4] Radha Thiagarasan, Dr. *Agathu Makalir.* Vanathi Pathippagam, Chennai.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*
239
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# பெண் அடியாரின் பக்திச் சிறப்பு

**முனைவர்கி. நாகேந்திரன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர், விருதுநகர்மாவட்டம். தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-2865-7832
**DOI: 10.5281/zenodo.14744906**

**ஆய்வுச்சுருக்கம்**

*பக்தி இயக்க காலகட்டத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்திப்பாடல்கள் பாடி பெருந்தொண்டாற்றினார்கள். இத்தொண்டை காரைக்கால் அம்மையார், திருமூலர் போன்றசைவப் பெரியவர்கள் தொடங்கிவைத்தனர். பக்தி இலக்கியகாலகட்டத்தில் முதல் பெண் அடியார்காரைக்கால் அம்மையார் ஆவர் . இவர் காலகட்டம் கி.பி.5ம் நூற்றாண்டு என்று அறிஞர்கள் கூறுகின்றனர். சைவக்கோயில்களில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் அறுபத்து இரண்டு நாயன்மார்கள் நின்றநிலையிலும் காரைக்கால் அம்மையார்மட்டும் அமர்ந்தநிலையில் இருப்பது சிறப்புடையது. ஆண் ஆதிக்கம் உயர்ந்து இருந்தகாலகட்டத்தில் காரைக்கால் அம்மையார் சிறந்து வாழ்ந்து முக்திநிலை அடைந்துள்ளார். இவரின் பக்தியை எடுத்துக்காட்டுவதே இவ் ஆய்வின் நோக்கம் ஆகும்.*

**குறிப்புச்சொற்கள்:** அம்மையார், புனிதவதியார், முக்திநிலை, மாதரசி, பேய்வடிவம்.

**முன்னுரை**

பெண்ணின் அறிவுத்திறன், பேசும்திறன், பண்பாட்டுணர்வு, வாழுகின்ற நிலை முதலியவற்றில் ஆண்களுக்கு நிகராக ஒருவறுக்கும் தாழ்நிலையின்றி. ஒப்பவைத்தும் உயிர்வாக மதித்தும் எல்லோருக்கும் உரியர் என்பதைச் சங்காலம் தொட்டு இன் நாள்வரை இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. அத்தகையவரிசையில் பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர்மாக் கதையில் உரைக்கப்பட்டுள்ள பெண் அடியார்களில் ஒருவரான புனிதவதியார் என்னும் பெயர் அமைந்த, மாதரசிகளுள் ஒருவரான காரைக்காலம்மையாரின் பக்திச் சிறப்பை ஆராயவிழைகின்றது. காரைக்காலம்மையாரின் வாழ்க்கை ஓர் அற்புதமான தியாகவாழ்க்கையாகும். யாருமே செய்ய முன்வராத செயலைச் செய்தார். இளமையைத் துறந்து பேய்வடிவம் பெற்றார். மேலும் எல்லாம் வல்ல சிவபெருமானால் "அம்மையே" என்று அழைக்கவும் பெற்றார். அது மட்டுமல்ல தமிழ் மொழியில் முதன் முதலாக அந்தாதியும், பதிகமும் பாடிய பெருமையும் அவரையேசாரும்.

**இளமையிலேயே பக்தி**

தவப்பெருமையும், செல்வச்சிறப்பும், சிவப்பற்றும் ஒருங்குநிலவிட குடும்பச் சூழலில் புனிதவதியாகிய குழந்தை வளர்ந்தமையின் இளமையிலேயே அவருடைய பேச்சிலும்,

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

**விளையாட்டிலும் சிவன் பால் அன்பு தோன்றிவிளங்கினார்.**

**மல்கு பெரும் பாராட்டின் வளர்கின்றார் விடையவர்பால்**

**அல்கிய அன்புடன் அழகின் கொடுத்தொழுவ தெனவளர்வார் (கா.அ.பு. பா. 4)**

குடிப்பிறப்பும் கல்வியும் ஒருபால் இருப்பினும், சூழ்நிலை ஒருவரது மனவளர்ச்சிக்கும், பண்பாட்டுக்கும் காரணமாகும். அதனால் திருந்திய கல்வியும், பொருந்திய இளமையும், நிறைந்த புனிதவதியாரின் திருவுள்ளம் திருவருள் நெறியில் அமைந்திருந்தது. ஏனைய சிறுமிகளோடு விளையாடுங்கால் அவருடைய எண்ணமும் பேச்சும் இனநலச் செய்கையும் எல்லாம் சிவ பெருமான் திருநெறியிலேயே ஒன்றியிருந்தன.

**விளையாட்டிலும் பக்தி**

வண்டல் என்பது மகளிர் விளையாட்டு. ஏனைய மகளிரோடு கூடி விளையாடுமிடத்தும் சிவபரம் பொருளின் திருவார்த்தையே அவர் வாயில் வந்தன எனின் அதற்கு அவர் குடும்பச் சூழ்நிலையல்லது வேறு காரணம் இல்லை. அவ் விளையாட்டிடத்தும் சிவத் தொண்டர் எவரேனும்வரின், உடனே புனிதவதியார் அவர்களை மனமுவந்து தொழுதார் என்பதனை,

**தொண்டவரில் தொழுது தாதியர் போற்றத் துணைமுலைகள்**

**கொண்டநு சுப்பொதுங்கு பதங்கொள்கை யினிற்குறுகினார் (கா.அ.பு. பா. 5)**

இது போல மாணிக்கவாசகர் தம்பாடல்களின் மூலம் பெண்களின் விளையாட்டுப் பாங்கினில் இறைனைப் போற்றியுள்ளதாகக் கூறப்படுகிறது. "இறைவனைப் போற்றிப்பாடுவதால் வாழ்வில் அமைதியும், மகிழ்ச்சியும் உண்டாகும். அடியார்களைத் தொழுவது பணிவு என்னும் பண்பை வளர்க்கும்" (இந்தியச் இலக்கியச் சிற்பிகள் காரைக்கால் அம்மையார். ப.19) என்று கூறுகிறார். நமக்கு ஒருவரிடத்து அன்புண்டாயின் அவருடைய உறவினரிடத்தும் அன்புண்டாகும். அது போலவே, சிவன்பால் உண்மையன்பு இருக்குமாயின், அவருடைய தொண்டரிடத்தும் அன்பும், நன்மதிப்பும் தோன்றும். இது பற்றிச் சிவஞானபோதம்,

**மாலற நேயமும் மலிந்தவர் வேடமும் ஆலயம்தானும்**

**அரன் எனத் தொழுமே (அகத்தில் மகளிர் ப. 93)**

இத்தகைய சிவவொழுக்கம் புனிதவதிக்கு இளமையிலே விளங்கியிருந்தது என்பதை வெளிப்படுத்தவே.

**அண்டர் பிரான் திருவார்த்தை அணையவருவன பயின்று**

**தொண்டர்வரின் தொழுது (பெ. பு .கா. அ. பு. 1721)**

வளர்ந்தார் என்று சேக்கிழார் தெரிவிக்கின்றார்.

**பக்தியின் இல்லறச் சிறப்பு**

பெண்கள் இல்லறவாழ்விற்கு மட்டுமே ஏற்றவர்கள் என்ற கருத்தை மாற்றி ஆன்மீகத்தில் தனக்கெனத் தனியிடம் அமைத்துக் கொண்டவர் காரைக்கால் அம்மையர். இவரது செயல் புரட்சிகரமானது. அன்றைய சமுதாயச் சூழலுக்கு புதுமையானது இவரது

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

பாடல்கள். தெய்வீகத்தையும் இவரின் எதிர்பார்ப்பையும் எடுத்தியம்புகின்றன. புனிதவதி என்று பெயர் பெற்ற காரைக்கால் அம்மையார் செல்வாக்கு மீக்க வணிகரின் ஒரேமகள். செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் சீரும் சிறப்புமாக வளர்ந்தார். சிறுவயது முதல் சிவபக்தியில் தீராத அன்பு கொண்டு இருந்தார். திருமணத்திற்குப் பின் வணிகராகிய தம்கணவரின் மனம் கோணாது வாழ்ந்துவந்தார். கடமை உணர்வுமிக்கவராக, கணவனுக்கு அடிபணிந்து அன்றைய பெண்கள் போலக் குடும்ப வாழ்க்கை நடத்திவந்தார். இல்லந்து கடமைகளையும், சிவத் தொண்டினையும் ஒருங்கே கடைப்பிடித்துவந்தார். பக்தி இயக்கக்காலத்தில் பெண்களுக்குச் சமயத் தொண்டினும் ஈடுபட அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது என்பதனைச் சேக்கிழாரும்,!

**பூங்குழலார் அவர் தாமும் பொருவிடையார்திரு**
**ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றி மிகப்பெருகப்**
**பாங்கில் வரும்மனை அறத்தின்பண்பு விழாமையில் பயில்வோர் (பெ. பு. கா. அ.பு: 1730)**

என்று சிறப்பித்துப் பேசுகின்றார். இருகனிகள் புனிதவதியார் இல்லறத்தில் மிக்க ஈடுபாடு கொண்டு வாழ்ந்துவந்தாலும் கணவன், மனைவியிடையே "புரிந்துகொள்ளல்" பண்பு குறைவாக இருந்தது. சிவபக்திமிகுந்த மனைவியுடன் வாழ்ந்து வரும் பரமதத்தன், தன்னைச் சிவபக்தியில் ஈடுபடுத்திக் கொள்ளாமலும், சிவபக்தியில் மனைவி ஈடுபடுவதைத் தடுக்காமலும் இருக்கிறான். ஒரு நாள் கணவனுக்கு வேண்டிய, ஒழுக்கநெறியில் மிக்கோர் இருமாங்களிகளைக் கொண்டுவந்து கொடுத்தனர். அவற்றுள் ஒன்றைப் புனிதவதியார் சிவனடியார்க்குப் படைத்து விட்டார். அதனை,

**இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள் – 81)**

என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அதற்கேட்டவாறு வருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கியவர் காரைக்கால் அம்மையார் ஆவார். அதேபோல திருமூலரும் ஆயிறக் கணக்கான விக்கிரங்கள் செய்து கொடுப்பதும் ஆயிரக்கணக்கான கோபுரங்கள் கட்டிக் கொடுப்பதைவிட ஒரு ஞானிக்கு ஒரு நாள் ஒரு பகற்பொதில் உணவளிப்பதற்கு ஈடாகாது என்கிறார்,

**அகரம் ஆயிரம் அந்தணர்க்கு ஈயில்என்**
**சிகரம் ஆயிரம் செய்து முடிக்கல்என்**
**பகருஞானி பகலூண் பலத்துக்கு**
**நிகரிலை என்பது நிச்சயம் தானே (திருமந்திரம் 1860)**

என்று சிவனடியார்க்கு அமுது செய்தலின் சிறப்பை இப்பாடல் புலப்படுத்துகிறது. அதேசமயத்தில் உணவு உண்ணவந்த பரமதத்தனுக்கு ஒரு பழத்தைப் படைத்தார். சுவை மிகுந்திருந்ததால், மற்றொருப் பழத்தையும் கேட்கிறான். இச் செய்தியினை,

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**மனைவியார் தாம்படைத்த மதுர மிகவாய்த்த கனி**
**தனை நுகர்ந்த இனியசுவை ஆராமைத்தார் வணிகன்**
**இனைய தொருபழம் இன்னும் உளததனை இடுகஎன**
**அனையது தாங்கொண்டுவர அணைவார் போல் அங்ககன்றார் (பெ.புகா.அ. 1740)**

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். கணவனுக் குரிய கடமைகளை நிறைவேற்றும் பெண்ணேயாயினும் சிவனடியார்க்குப் பழம் படைத்ததைக் கூறமுடியவில்லை. ஏன்? நடந்த நிகழ்ச்சியினைக் கூறுவதற்குக் கூட புனிதவதியாருக்கு உரிமை இருக்கவில்லை. கணவனின் அனுமதியின்றிக் கொடுப்பதற்கு அவருக்கு உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கிறது. கணவன் இரு பழங்களில் ஒன்றைப் பெற்ற பின் மற்றொன்றையும் கேட்கின்றான். உனக்கு வேண்டுமே, நீ ஒன்றை உட்கொள் என்ற விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும் அவனிடம் இருக்கவில்லை. இது ஆண்களின் ஆதிக்கச் சிந்தனையை வெளிப்படுத்துகிறது.

**தெய்வம் அருள்கொடுத்தல்**

பன்னெடுங்காலமாகவே, ஆண் வர்க்கத்தினரிடையே சந்தேகம் என்ற கொடிய நோய் தொற்றிக் கொண்டிருக்கிறது. இதற்கு, தெய்வ வடிவானவன் என்று கூறப்படும் இராமனும், முனிவர்களிலே சிறந்த தவவலிமை பெற்றவருமான கௌதமரும் விதி விலக்கல்ல. பரமதத்தனும், மற்றொரு பழம் வேண்டும் எனக்கேட்க, உண்மையை உரைத்தால் கணவனின் செயல் என்ன வாயிருக்குமோ என்ற மறுத்தலித்துப் பின் இறைவனை நினைந்து வழிபட, அவரும் அளிக்கின்றார். பழத்தினை உண்ட பரமதத்தன் இக்கனி,

**...மூவுலகில் பெறற்கரிதல்**
**பெற்றது வேறெங்கென்று பெய்வளையார் தமைக்கேட்டான் (பெ. புகா. அ. பு. 1743)**

இளவயது முதல் பக்தி நெறிமிக்கிருந்த புனிதவதியார், இறைவனின் அருட் தன்மையால் பெற்றதாகக் கூறுகிறார். இவ்வுண்மையை ஏற்றுக் கொள்ளும் மனநிலையற்ற பரமதத்தன், மனைவியின் அருள்நெறிக்கு அப்பாற்பட்டு இருந்த காரணத்தினால் ஐயத்துடன்,

**தேசுடையசடைப் பெருமான் திருவருளேல் இன்னமும் ஓர் ஆசில்கனி அவனருளால் அழைத்தளிப்பாய் என மொழிந்தான் (பெ. புகா. அ. பு. 1745)**

புனிதவதியாரும் கணவனின் செயலைக்கண்டு செய்வதறியாது இப்பொழுது கொடாமற் போனால் தன்மீது கணவனுக்குள்ள ஐயம் உறுதிப்படும் என்று அஞ்சி, இறைவனை வேண்டிப் பழம் பெறுகிறாள். அதனைப் பரமதத்தன் கையில் பெற்றவுடன், அக்கனி மறைந்து விடுகின்றது. இதனைக்க ண்டவுடன், **"அணி குழலவரை வேறோர் அணங்கெனக் கருதி" (பெ. புகா.அ. பு. 1747)** தான் கணவனாக இருப்பதற்குத் தகுதியற்றவன் என்ற நிலைக்கு ஆளாகி மனம், அறிவு இவற்றின் வாயிலகித்துணிகிறான். இத்தெய்வத் தன்மைவாய்ந்த பெண்ணைவிட்டு அகலத் தலைப்பட்டான். இவ்விடத்தில் ஒரு பெண், தன்னைவிட்டு தெய்வ

நிலை எய்திவிட்டாளே என்று கருதி, இல்லறத்திற்கேயுரிய இன்பங்களில் ஈடுபடாது, அவ்வெண்ணமே மேலோங்கிநிற்க, மனைவி என்றபற்றை அறுத்து நின்றான்.

**தெய்வ நிலையில் பெண்**

பரமதத்தனின் மனக்கருத்தை உணராத புனிதவதியார் பிரிந்து சென்ற அவன் மீண்டும் வருவான் என்று காலத்தைப் போக்கிவந்தார். நீண்ட நாட்களுக்குப் பின், தன் கணவன் மறுமணம்புரிந்து, ஒரு பெண் மகவிற்குத் தந்தையாகிவிட்டான் என்று உறவினர் மூலம் அறிகின்றார். உறவினரும் அவரைக் கணவனுடன் இணைத்துவைக்க அழைத்துச் செல்கின்றனர். அவரைக் கண்டவுடன் பரமதத்தன் தரையில் வீழ்ந்து வணங்குகின்றான். பரமதத்தன் வணங்குவதைக் கண்டு பெண்களுக்கேயுரிய அச்சத்துடன் ஒதுங்கிநின்றார். சுற்றத்தாரும் பரமதத்தன் வணங்குவதைக்கண்டு, ஏன் வணங்குகிறீர் என்று கேட்க, அவர்களை நோக்கி,

**மானுடன் இவர்தாம் அல்லர்**
**நற்பெருந் தெய்வமாதல் நானறிந் தகன்றேன் (.பெ. புகா.அ.பு. 1763)**

என்று கூறுகிறான். அம்மையாரை ஐயுற்ற கணவனேதுணிந்து, அனைவருக்கும் முன்பு தெய்வம் என்று கூற, மற்றையோருக்கும் அவரது தெய்வத்தன்மை புலப்பட்டது. அனைவரும் வணங்கினர். இந்நாள் வரை இந்நிகழ்வை ஒரு செய்தியாக அம்மையார் கருதவில்லை. ஆனால், இந்நிகழ்வே, தன் இல்லறவாழ்விற்கு முடிவைத் தந்ததாகக் கருதியவுடன் வாழ்வின் அடுத்தகட்டத்தைத் தேர்வு செய்கிறார் புனிதவதியார். இளமையில் மிகுந்த மகிழ்வுடன் சென்ற புனிதவதியாரின் வாழ்க்கை, திருமணம் முடிந்த சில நாட்களிலேயே தொடர்ந்து துன்பங்களை எதிர்கொள்கிறது. கணவனுக்குப் பணிவிடை, கணவனால் கைவிடப்படல், சமுதாயத்தால் ஒதுக்கிவிடப்படல், கணவனின் மறுமணம் போன்றவற்றால் சரியான முடிவெடுக்க முடியாத நிலையில் கணவனைச் சந்தித்த போது, அவனால் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்ட போது பல்வேறுபட்ட மனஉளைச்சலுக்கு உள்ளாகிய புனிதவதி, தமக்குக் கிடைத்தற்கரியது பக்தி நெறியே என்று கருதி அதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். தம் கணவர் மறு மணம் செய்து கொண்டது போல் அவரும் மறுமணம் செய்து கொள்ளமுடியும். ஆயினும், சமுதாயம் அவருக்குள் தெய்வ வடிவைப் புகுத்திவிட்டது. மேலும் பெண்கள் மறுமணம் செய்தல் என்பது பழங்காலம் முதலே மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. இது அவரை ஒரு கட்டுக்குள் கொண்டுவந்துவிட்டது.

**பேய்வடிவு ஏற்றல்**

"அழகு" ஒன்றே இல்லறத்திற்கு உகந்ததாகக் கருதியகாலத்தில் வாழ்ந்த புனிதவதியார், அது மறுக்கப்பட்டது என்ற உடனேயே தமது அழகை இழக்கத்துணிந்தார்." அவருக்குக் கிடைத்த ஒரே மார்க்கம் சமயவாழ்க்கையே, கல்யாணம், கணவன், வீடு, குடும்பம் என்னும் வட்டத்தைவிட்டு நீங்கிய ஒரு தேடல் என்று "தமிழ் வரலாற்றுப் படி மங்கள் சிலவற்றில் ஒரு

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

பெண் நிலை நோக்கு" என்ற தம் நூலில் குறித்துள்ளார் செல்விதிருச்சந்திரன். மேலும் காரைக்கால் அம்மையார் அதற்காக வீட்டிற்குள் முடங்கிவாழவில்லை. தன் தந்தையிடம், ஆறுதல் பெறமுடியாது என்ற காரணத்தினால், தெய்வீகத் தந்தையான சிவனிடம் தஞ்சம்புகுகிறார். அவரிடம், கணவனால் தீண்டப் பெறாத அழகு தனக்குத் தேவையில்லை என்று வேண்டிப் பேயுருவெடுத்தார். இதனை,

**ஈங்கிவன்குறித்தகொள்கைஇதுஇனிஇவனுக்காகத்**
**தாங்கியவனப்புநின்றதசைப்பொதிகழித்திங்குன்பால்**
**ஆங்கநின்தாள்கள்போற்றும்பேய்வடிவுஅடியேனுக்குப்**
**பாங்குறவேண்டும்என்றுபரமம்தாள்பரவிநின்றாள் (பெ. புகா.அ.பு. 1765)**

என்றுபாடுகின்றார்.

சங்ககாலத்திலும் பெண்களுக்கென்று உரிமை மறுக்கப்பட்டு வந்ததனைச் சங்கப் பெண்பாற் புலவரான ஔவையார் வாயிலாகவே அறியலாம். இவர் இளவயதிலேயே இறைவனை வேண்டிப்பின் முதுமை எய்தினார். ஔவைக்குத் திருமணம் முடிக்கப் பெற்றோர் எண்ணினர். திருமணத்தில் விருப்பம் இல்லை என்பதை எடுத்துரைக்க அவருக்கு உரிமை இல்லை; அதற்கான துணிவும் இல்லை. இதற்குக் காரணம் அவர் வாழ்ந்த காலச்சமுதாயச் சூழ்நிலையாகும். விருப்பு, வெறுப்பு கூறக்கூடிய நிலையிலும் அவர் இல்லை. புறவாழ்வே சிறந்ததென எண்ணிய ஔவையார் அதற்கு இளமையும், அழகும் தடை என்று உணர்ந்து இளமை நீங்கி முதுமை உருப்பெற்றதாக வரலாறு கூறுகின்றது பேய்வடிவு பெற்ற காரைக்காலம்மையாரும், இறைவனைத் தலையால் நடந்து சென்று வழிபட்டார். இறைவனால் "அம்மையே" என்றழைக்கப்பட்டு அவரின் அன்பைப் பெற்று, திருநடனம் காணச்சென்றார்.

**அம்மையாரின் முக்தி நிலை**

பக்தி இலக்கியத்தில் பல்லோரும் பெண்களைப் பாராட்டியுள்ளனர். ஆயின் அக்கருத்து தக்கதுதானா என்று சிந்தித்துப்பார்க்க வேண்டியிருக்கிறது. காரைக்கால் அம்மையாரிடம் பரமதத்தன் மீண்டும் ஒருமாங்கனி கேட்டபோது மறுக்க முடியாமல், ஒரு மாங்கனி இறைவனிடம் பெற்றுக் கொடுத்துப் பெண்ணின் பக்திச்சிறப்பைப் போற்றுகிறார் சேக்கிழார். ஆனால், பரமதத்தனின் செயல் பெண்களின் கூற்றைதம்பாமல், சந்தேகக் கண்ணோட்டத் தோடு கேட்பதைப் போன்று அமைகின்றது. பரமதத்தன் தன்னைவிட்டு மறுமணம் செய்தபோது அம்மையாரால் எதிர்ப்புத் தெரிவிக்க இயலவில்லை. இது ஆணினத்தின் அடக்கு முறையாகக் கூறப்படுகிறது. இறுதியில் காரைக்கால் அம்மையார் பேய் உருவமெடுத்து, இறைவனிடத்திற்குத் தலைகீழாக நடந்து சென்றதாகப் பெரியபுராணம் கூறுகின்றது. ஆயின், இப்பெரிய – புராணத்தில் கூறப்பட்டபிற ஆண், பெண் அடியாரிலிருந்து இவர் வேறுபட்டுக் காணப்படுகிறார். ஆண், பெண் இருவரும் பக்தியில் சமம் என்று கருதப்பட்டபோதிலும், ஆணுக்கு முதுமையில் இளமையைக் கொடுத்தும், சிறுவயதிலேயே ஞானப்பாலூட்டியும்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

அருளினைச் செய்த இறைவன் என்றறு என்று கூறும் இந்நூற்கருத்துக்கள் பெண்டிற்குரிய முக்தியைக் கூறும்பொழுது அதிலிருந்து மாறுபட்டுக்காணப்படுகிறது. இருப்பினும், பெண்ணைத் தாயாகக்கருதிப் போற்றி வரும் தமிழிலக்கியத்தில் பெண்ணைப் பேயாக்கி முக்தியடையச் செய்வது சிறந்தபக்திக்குச் சான்றாக கூறலாம்.

**முடிவுரை**

பெரியபுராணத்தில் காணப்படும் பெண்ணடியார்களின் வாழ்க்கை அன்றைய காலகட்டத்தில் பெண்களின் நிலையைச் சித்தரிப்பதாக உள்ளது. பெண்களின் பக்திச்சிறப்பை வெளிப்படுத்துகிறது. புனிதவதியார் வரலாற்றில் சேக்கிழார் படைத்திருக்கும் பெண்பற்றிய மதிப்பீடானது அன்றய காலகட்டத்திற்கு ஏற்றார் போல் அமைந்துள்ளது இன்றைய காலகட்டத்திற்கு பொருந்தாத நிலையில் உள்ளது. ஆனால் காரைக்கால் அம்மையார் மனையறத்தில் மாண்பும், பண்பும். மகளிர் வானுறையும் தெய்வத்துள்வைக்கப்படும் பெருமை பெறுபவர் என்று தெய்வப்புலவரின் வாக்கு இங்கு உண்மையென உரைக்கப்பட்டுள்ளது நமக்கு புலனாகிறது எனலாம்.

**குறிப்புகள்**

[1] கோமதி சூரியமூர்த்தி. *இந்திய இலக்கிய சிற்பிகள் காரைக்கால் அம்மையார்.* சாகித்திய அகாதெமி, 2020.
[2] சிற்பி பாலசுப்பிரமணியம். *திருக்குறள்.* தாமரை பப்ளிகேசன்ஸ் (பி) லிட் 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை -600050.
[3] மாணிக்கனார். அ. புலவர். *பன்னிரு திருமுறைகள் மூலமும் தெளிவுரையும்.*(மூன்றாம் தொகுதி) வர்த்தமானன் பதிப்பகம், தி. நகர் சென்னை, 1998.
[4] ராதாதியாகராசன், முனைவர். *அகத்து மகளீர்.* வானதி பதிப்பகம், சென்னை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.